(இ) ஆம் எனில், எந்த எந்த ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து விண்ணப்பங்கள் வந்துள்ளன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) பல்லடம் வட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் இருந்து சமுதாயக் கிணறுகள் வெட்டக் கோரி விண்ணப்பங்கள் ஏதும் அரசுக்கு வரவில்லை.

(இ) எழவில்லை.

கொள்ளிடம் ஒன்றியத்திலுள்ள ஊராட்சிகள்.

***697 வினு—திரு. எஸ். வடிவேல் :** மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொள்ளிடம் யூனியனில் உள்ள கோபால் சமுத்திரம், திரு முல்லைவாசல் ஊராட்சி மன்றங்களை பேரூராட்சி மன்றங்களாக மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

சென்னை மாநகராட்சியில் பணியாளர்கள் நியமனம்

***698 வினு—திரு. ந. சோமசுந்தரம் :** மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகராட்சியில் பணியாளர்கள் நியமனம் செய்வதில் தாழ்த்தப்பட்டவர்களுக்குரிய விகிதாச்சாரம் அளிக்கப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சென்னை மாநகராட்சிப் பணியின் IA, IB, II பிரிவு அலுவலர்களுக்கான பொறியியல் பணி விதிகளிலும், பொதுச் சுகாதாரம், மருத்துவப் பணி விதிகளிலும், நேரிடையாக அலுவலர்களை நியமனம் செய்யும்போது தாழ்த்தப்பட்டவர் களுக்குரிய விகிதாச்சாரம் அளிக்கப்படவேண்டும் என்று விதியுள்ளது. மற்ற III, IV பிரிவு அலுவலர்கள் நியமனம் சம்பந்தமாக ஷை விகிதாச் சாரம் ஏற்படுத்தப்படவில்லை.

திரு. வை. பாலசுந்தரம் : சென்னை மாநகராட்சி போன்ற ஸ்தல ஸ்தாபன அமைப்புகளில் அவர்களுக்கு 18 சத விகிதம் ஒதுக்கப்படவில்லை என்று கூறப்பட்டிருக்கிறது. நம் அரசு அவ்வாறு ஒதுக்குவதற்கு சட்ட பூர்வமாக ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாநகராட்சியில்தான் அவர்களுடைய பைலாக்கள் திருத்தப்பட வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : மாநகராட்சிகளுக்கு சிப்பந்திகளை சர்வீஸ் கமிஷன் மூலமாகத்தான் தேர்ந்தெடுக்கச் செய்வது என்று யோசித்தோமே, அது எதிர்காலத்திலாவது செயல்படுத்தப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முதலில் அதுபோல எண்ணப்பட்டு பிறகு கைவிடப்பட்டது. அவர்களே குழுக்கள் அமைத்துக் கொண்டு, விதிமுறைகளை ஏற்படுத்திக்கொண்டு அதன் அடிப்படையில் தேர்வுகளை நடத்துகிறார்கள்.

புலவர் திரு. சி. பழனிச்சாமி : பேரறிஞர் அண்ணா போன்றவர் களுடைய சிலைகளை நாம் சென்னையில் வைத்திருக்கிறோம். பறவைகள் அந்தச் சிலைகளை அசுத்தப்படுத்துகின்றன. அவற்றை நல்லமுறையில் பராமரிக்க மாநகராட்சி சில பணியாளர்களை நியமிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

Salary for Municipal Councillors

* 699 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government have turned down the request of the Tiruvottiyur Municipality for payment of salary to Municipal Councillors ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ), (இ) திருவொற்றியூர் நகராட்சி நகரமன்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் மாத ஈட்டுப் படியாக ரூ. 75 தர அனுமதிக்கும்படி அரசைக் கேட்டுக்கொண்டது. இந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

திரு. என். டென்னிஸ் : நகர மன்றத்தின் அங்கத்தினர்கள் பொருளா தார நிலையில் பின்தங்கி இருக்கிறார்கள். அவர்களுடைய பணிகளும் விரிவு அடைந்திருக்கின்றன. ஆகவே எல்லா நகர மன்ற அங்கத்தினர்களுக்கும் ஓரளவு சம்பளம் கொடுப்பதுபற்றி அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நீண்டகாலத்திற்குப் பிறகு இப்போதுதான் சென்னை, மதுரை நகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு முறையே ரூ. 100, ரூ. 75 மாதந்தோறும் படி வழங்கும் ஏற்பாடு வந்திருக்கிறது. இதற்குக் காரணம் நகரங்கள் விரிவு அடைந்துவிட்ட காரணத்தினால் அதிக தூரத்தில் இருந்து அடிக்கடி செலவு செய்து கொண்டு வந்துபோகவேண்டியிருக்கிறது என்பதாகும். மற்ற நகராட்சி களைப் பொறுத்தவரை அங்கத்தினர்கள் அங்கங்கே இருக்கிறவர்கள்— மேலும் பலவற்றின் நிதி நிலையும் சரியாக இல்லை, ஆகவே இந்தக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

TRUTH ALONE TRIUMPHS